**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY IN PATTA LAND OF M/S. S. HEMPRASATH ROUGH STONE AND GRAVAL QUARRY, S.F.NO. 170/2, 170/3, 170/4, 236/1B, 236/1C, 236/1D, 220/1A1 (PART), OVER AN EXTENT OF 4.88.0 HECTARES IN SIRUTHAMUR VILLAGE, UTHIRAMERUR TALUK, KANCHEEPURAM DISTRICT ON 05.10.2023**

| | |
|---|---|
| Name of Project: | Proposed rough stone and gravel quarry of M/s. S. Hemprasath Rough Stone and Graval Quarry, S.F.No. 170/2, 170/3, 170/4, 236/1B, 236/1C, 236/1D, 220/1A1 (part), over an extent of 4.88.0 Hectares, Sirudhamur Village, Uthiramerur Taluk, Kancheepuram District. |
| Venue: | M/s. R. R. K. Mahal,<br>No.167- Thirumukoodal, Thirumukoodal – Pinaiyur Road,<br>Uthiramerur Taluk,<br>Kanchipuram District. |
| Date and Time: | 05.10.2023 at 10:30 A.M |
| Participants: | 1. Mr.M.Narayanan,<br>Competent Authority / District Revenue Officer (L.A), National Highway, Kanchipuram.<br><br>2. Er.K.Prakash,<br>District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur,<br>Kancheepuram District. |

At the outset, the District Environment Engineer, Tamil Nadu Pollution Control Board, Sriperumbudur welcomed the District Revenue Officer, Kancheepuram District, other Government Officials, Public and Social & Environmental activists for the Public Hearing and informed that M/s. S. Hemprasath has proposed Rough stone and gravel quarry at S.F.No. 170/2, 170/3, 170/4, 236/1B, 236/1C, 236/1D, 220/1A1 (part), over an extent of 4.88.0 Hectares, Sirudhamur Village, Uthiramerur Taluk, Kancheepuram District and have approached State Level Environmental Impact Assessment Authority-TN seeking Environmental Clearance for the proposed rough stone and gravel quarry in cluster. In this regard, SEIAA-TN has issued Terms of Reference (TOR), subject to one of the condition that Public Hearing shall be

conducted and address the concerns raised during the public hearing to SEIAA-TN. Based on that, the public hearing was arranged today 05.10.2023 after getting approval from the District Collector, Kancheepuram District and public notice has been published as mandated in the newspaper namely "The New Indian Express" (English) & "Dhinakaran (Tamil)" on 25.08.2023. Pamphlets also issued regarding intimation of Public Hearing to the local villages. On behalf of project proponents, the Project Consultant will make power point presentation about the said proposed projects. After that the public present here can express their views, concerns and questions if any by indicating their name and village name from where he /she belongs to and the same will be recorded.

Project consultant Thiru. M. Vijay Prabu explained about the proposed Rough stone and gravel quarry project through a power point presentation.

The views, concerns and questions of the public and the clarification from the project proponent are detailed below.

| S.No | Name and Village | Comments and requests |
|---|---|---|
| 1 | Thiru.Sivakumar, Arunkundram | I am forty-three years old. I have been constantly observing the condition of the village from day one to till today. In this village, the ancestors were using the lake and pond. This village is surrounded by hills. Uthiramerur area is a famous tourist place, people from Chennai come and visit Palar River Bridge. Earlier, Lake water was regularly used for farming and water level was good. But nothing is right anymore. Government of Tamil Nadu is continuously allowing to operate quarries. Not even an ambulance could come to our village if accident occurred. Because of the operation of the quarry here, sheep and cows could not be grazed, agriculture could not be done and the water resources have decreased. We also submitted petitions several times to the District Collector, but till no action has been taken. I have been continuously voicing for forty years. Rulers are |

| | | |
|---|---|---|
| | | changing but till now no action has been taken. Eighty percent of the population has vacated the Siruthamur Panchayat. It is now only 20 percent. How we live with sheep and cows, the walls of the house are cracking. Farming could not be done, school children could not go to school on time. Diseases like TB and Asthma occurs and when you go to the hospital, the doctor tells that you get such diseases because you are working in the quarry. If this continues, our village will be totally destroyed. Experts say that they do not know when the earthquake will hit, it could happen tomorrow or it could happen in half an hour. We have given several petitions to the Chief Minister in this regard. You have to save this village. Do you want this Siruthamur panchayat to be destroyed? We are continuously submitting petition to the Pollution Control Board. But no action has been taken. If a school student dies after being hit by a lorry, an ambulance could not come at that moment, the bus facility not available in the night time. We are opposing for the permission of quarries, but if quarrying happens again and again, we should leave the town like Sri Lankan refugees. It is more dangerous than TB, asthma and cancer.<br>I am driver of school bus. I cannot go to school on time, nothing has happened yet. Earlier there were so many palm trees in our village but now there is not a single tree. I cannot go to Chennai to work; I cannot raise a goat or a cow and cannot do anything. I said many times that the water sprinkling was not carried out and not laying cement roads. No action has been taken |

| | | |
|---|---|---|
| | | till now. They keep on giving quarry permits again and again. If you go to the neighboring village, it will be very nice. When we were young, we used to graze goats and cows in Pusa Hill, and we can get herbal products. So please do not bring quarry to this area again I am saying this on behalf of these people. If there is no quarry, the people of the village will be better off. So I request on behalf of our village that our village does not need stone quarry. |
| 2 | S.Santhakumar, Arunkundram | Due to stone quarrying in our area, we ten or twenty villages survive. So, we have no problem getting quarry. |
| 3 | Thiru.Devandiran, Patta | At first, this meeting is not arranged at the relevant place. The concerned people did not come and the affected people did not come here. They have kept this meeting at a distance of 4 kilometers. They should hold meeting within the village to ask the people about the effects. It is not fair to change it here and hold it in another village. Lorries should not be operated in the nighttime. Quarries extracting stones from areas other than the permitted area. The quarry owners should be instructed to extract within the permitted area. They continue to work through the night; even now they are mining stones all night at the quarry located near my house. They are setting off explosives. They had previously halted the blasting, but now they are using explosives, resulting in cracks in nearby houses. Quarries situated adjacent to houses must be thoroughly examined, and appropriate measures should be taken by the relevant authorities. |
| 4 | Thiru.Pandian. | The government and officials are spending |

| | | |
|---|---|---|
| | Thirumukudal | money on quarries instead of spending to the public. Most of the farmers are illiterate. The quarry owners have laid road to a height of 5 feet, so we can't do any agriculture. I have a tractor but can't go on this road. So, we need to have a separate road. Ten lorries went that day but today fifteen hundred lorries are going and that too many are going fast. |
| 5 | Thiru.C.Devaraj, Arunkundram | For more than fifteen years they have destroyed our entire village, and there is little left. Not only this private quarry but also government quarries. Leaving the remaining space for this stone quarry people is like burying these people. By paying thousands, five hundred and hundreds to the people, the government allowing stone quarry to operate, which is against the people. The government should consider this. We are prepared to go to court. Additionally, we are actively mobilizing the community for protest. |
| 6 | Thiru.V.Manokaran, Arunkundram | In the last public hearing meeting, the panchayat council presidents and the panchayat council members recorded the public grievances in their views. All the water supply channels are being removed. So, Our first request to the quarry owners is to repair the water supply channel. But they had not done. Roads are heavily damaged. The students find difficult to go to school. Government buses are not operated here, causing inconvenience. We are not against anyone. We said if people's livelihood is okay, we will allow it. People are opposing for using this road because it cannot withstand only 40 to 50 tons. If more than 100 tons of weight, the road can't withstand. This has to be changed. |

| | | |
|---|---|---|
| 7 | Thiru.Damodaran, Arunkundram | People are not hygienic. More than five thousand lorries are running a day. Lorry goes this side and that side and we can't go in between. Earlier, kids used to walk to school alone, now every day parents had to take them to school. Please allow people to live peacefully. |
| 8 | Thiru.Lokesh., Arunkundram | We had said many times that this meeting should be held in a place related to the Panchayat and properly communicate to the public regarding this meeting. The general public who has come here is not from our village. Lorries were in operation even during the night. Houses were located within three hundred meters from the proposed quarry. Canals are not maintained properly. No road is laid, no water is poured and the lorries are operated on the government land. I keep on talking in this type of meetings but nothing happens. Five to eight quarries are coming up every year. Another person mentioned that he works in the quarry as driver. Since they lack education, they go to work as driver. There is no job opportunities for the graduates in that area. This situation is not beneficial to anyone. Earlier, when we climb up the mountain, we used to see the entire village of Chengalpattu and Walajabad but now we only see the quarry mined pit. Place our entire driver's license and Aadhaar card in that pit and bury us in it. In the city, houses are constructed by filling up the eri and the pond, but here good lands are given for quarrying. They run quarry in the land sold by farmers due to poverty. |
| 9 | Thiru.Sarvanan, Patta | I had already said in the past two meetings that |

| | | |
|---|---|---|
| | | robbery and evil acts are taking place at night. Even though the police department is doing some good work, as I mentioned in the last meeting we definitely need CCTV. Steps should be taken to plant tree saplings on the vacant and poramboke land, road damage should be repaired and must obtain Panchayat approval before permitting the quarry. We do not know how the quarry is coming. We had submitted petitions to the District Collector in this regard. We requested to put barricades for the finished quarries. Definitely it must be done. The cows are falling inside the pit. No flow of eri water in the water supply channel. We request you to fix this issues. |
| 10 | Thiru.Kaviyarasu, Patta | Quarry has been here for twenty five years, why quarry again? Students are unable to go to school. There are so many quarries all around. Again, if you give quarry for 10 years, then how can we live? The meeting should be held in an adjacent place and not outside. |
| 11 | Thiru.Manoharan, Patta | The roads were not good. My son goes to college by bike. Due to fast moving of lorries, he used to be hit by mud and will come back home unable to attend college. First people want adequate road facility, but there is no road facility. Children cannot walk alone on the Arumbuliyur junction, there is no speed limit. All parents go along with their children to school and bring them back and no one can be sent alone. No lorries should be allowed to operate between eight and nine in the morning when children go to school. What we need is common road facility, we need livelihood. Everyone works in the stone quarry, works as drivers and as |

| | | |
|---|---|---|
| | | masons and no one works in agricultural farms. There is no water canal facility. First fix all these things and let the quarry come, that is our decision. If a meeting is held in a village, no one is informed and we do not even know that. Today all are drinking alcohol. Elder people don't drink. 18-year-old boys are drinking and not studying. They should study and have educational facilities. Yesterday, the 5 students were hit with mud by a truck on their way to school. All the roads are potholed. Student's education is important. |
| 12 | Thiru.Srinivasan, Arunkundram | Everyone knows that the quarries have been operating here for past 15 years to 20 years. No action has been taken. No one has got benefitted in the surrounding 5 villages from these quarries. We request that the lorries should stop between 8AM to 10AM in the morning while students going to school. There is no road facility available and they said they will spray water but that is not the case. Today many families are surviving on the quarry. If quarries are operating, put fencing around the quarry. Stop operating the lorries during school going hours from 8AM to 10AM and from 4PM in the evening. They think that giving five hundred and thousand is enough to the publics. Around 150 people from the northern state are working here. You said we will give you jobs directly or indirectly, but after graduation around ten people are unemployed in our town; give them jobs as driver or operator based on their qualification. Give education to ten students from our town. If one person in a family gets a job and earns |

| | | |
|---|---|---|
| | | fifteen thousand a month, their child will live, their family will live. We can't stop the quarry. Give us jobs as we deserve. |

Since no more public came forward to offer their views, District Environmental Engineer concluded the public hearing meeting thanking the District Revenue Officer, Kancheepuram District who presided the meeting and Officials, Public and NGO's and also informed to the public that the proceedings (audio and video recording) of the meeting along with the hard copy of the minutes of the meeting will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA-TN), Chennai.

The list of participants, audio and video recording, representation received on stage during meeting in original with photographs of the Public Hearing meeting are enclosed herewith.

**District Environmental Engineer,**
**TNPCB, Sriperumbudur,**
**Kancheepuram District**

**Competent Authority /**
**District Revenue Officer (L.A), i/c**
**National Highway, Kancheepuram,**
**Kancheepuram District.**

3

**காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சிறுதாமூர் கிராமம், புல எண். 170/2, 170/3, 170/4, 236/1B, 236/1C, 236/1D & 220/1A1 (P) ல், 4.88.0 ஹெக்டர் பரப்பளவில், அமையவுள்ள தி/ள்.S.ஹேம்பிரசாத் என்பவரது சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி, சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 05.10.2023 அன்று காலை 10.30 மணியளவில் தி/ள்.R.R.K மண்டபம், திருமுக்கூடல், உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்.**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சிறுதாமூர் கிராமம், புல எண். 170/2, 170/3, 170/4, 236/1B, 236/1C, 236/1D & 220/1A1 (P)–ல், 4.88.0 ஹெக்டர் பரப்பளவில், அமையவுள்ள **தி/ள்.S.ஹேம்பிரசாத் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி,** |
| இடம் | தி/ள். R.R.K மண்டபம், எண்.167, திருமுக்கூடல், திருமுக்கூடல்– பினையூர் சாலை, உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம். |
| நாள் மற்றும் நேரம் | 05.10.2023 காலை 10.30 மணி |
| பங்குபெற்றோர் | 1. திரு. மா. நாராயணன், பி.எஸ்.சி<br>தகுதி வாய்ந்த அலுவலர்/ மாவட்ட வருவாய் அலுவலர்,(நி.எ)<br>தேசிய நெடுஞ்சாலை,<br>காஞ்சிபுரம் மாவட்டம்.<br><br>2. திரு. கு. பிரகாஷ், எம்.டெக்.,<br>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர்,<br>காஞ்சிபுரம் மாவட்டம். |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர் அவர்கள், இக்கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்தி தர வருகைதந்துள்ள மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம், அவர்களையும் மற்றும் ஏனைய அரசுத்துறை அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர் அனைவரையும் வரவேற்றார். காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சிறுதாமூர் கிராமம், புல எண். 170/2, 170/3, 170/4, 236/1B, 236/1C, 236/1D & 220/1A1 (P)–ல்,,

4.88.00ஹெக்டர் பரப்பளவில் **திரு/ள்.S.ஹேம்பிரசாத் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி,** அமைவதற்கு சுற்றுச்சூழல் அனுமதி வேண்டி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தில் விண்ணப்பித்து TOR (Terms of Reference) என்கின்ற வரையறையை பெற்றுள்ளது. சுற்றுச்சூழல் மதிப்பீட்டு குழுவின் 01.06.2023 தேதியிட்ட குறிப்பு விதிமுறை கடிதத்தின் அடிப்படையில், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்த கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் அதற்கான அறிவிப்பு 25.08.2023 அன்று **"தினகரன்"** என்கிற தமிழ் நாளிதழிலும் மற்றும் **"தி நியூ இந்நியன் எக்ஸ்பிரஸ்"** என்ற ஆங்கில நாளிதழிலும் வெளியிடப்பட்டு இன்று 05.10.2023 இல் இப்பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைத்தார்.

இதனையடுத்து இத்திட்டம் தொடர்பான விரிவான விளக்கம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்கத்தினை இத்திட்ட ஆலோசகர் திரு.M.விஜய் பிரபு, பொதுமக்களுக்கு எடுத்துரைத்தார்.

அதன் பின்பு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்களிடம் இந்த திட்டத்தைப் பற்றி தங்களது கருத்துக்கள் கேள்விகள், விளக்கங்கள் ஏதும் தேவையிருப்பின் அமைதியான முறையில் தங்களது பெயரையும் ஊரையும் குறிப்பிட்டு தெரியப்படுத்தலாம் என குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில் தாங்கள் கூறுகின்ற அனைத்து கருத்துக்களும் ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்படும் எனவும், எழுத்துப்பூர்வமாகவும் தங்களது கருத்துக்களை மனுவாகவும் கொடுக்கலாம் என கூறினார். இதை தொடர்ந்து கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்தார்கள்.

<u>பொதுமக்களின் கருத்து மற்றும் கோரிக்கைகள்</u>

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | கருத்து மற்றும் கோரிக்கைகள் |
|---|---|---|
| 1 | திரு.சிவகுமார்,<br>அருங்குன்றம் கிராமம் | எனக்கு நாற்பத்து மூன்று வயது நடந்து கொண்டு இருக்கிறது. நான் தொடர்ச்சியாக அன்று முதல் இன்று வரை கிராமம் இருக்கும் நிலையை பார்த்துக்கொண்டு இருக்கிறேன். இந்த கிராமத்தில் முன்னோர்கள் ஏரி, குளம் எல்லாவற்றையும் பயன்படுத்தி கொண்டிருந்தார்கள். இது எல்லோருக்கும் தெரியும். இந்த கிராமம் மலைகளை கொண்ட கிராமம், உத்திரமேரூர் பகுதி சுற்றுலாவிற்கு உகந்த பகுதி, சென்னையில் இருக்கிற மக்கள் வருவார்கள் வந்து பாலாற்று பாலத்தை பார்த்து செல்வார்கள், இங்கு விவசாயம் செய்ய, ஏரி நீர் பயன்படுத்தப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | | நீர்வளம் சிறப்பாக இருந்தது. ஆனால் இப்பொழுது ஏதுவுமே சரியில்லை. தமிழக அரசு தொடர்ச்சியாக கல்குவாரி இயங்க அனுமதி கொடுத்துக்கொண்டு வருகின்றது. எங்கள் கிராமத்திற்கு உதவிக்கு கூட ஒரு ஆம்பூலன்ஸ் வர முடியவில்லை. இங்கு கல்குவாரி இயங்குவதால் ஆடு, மாடு மேய்ப்பதற்கு முடியவில்லை, விவசாயம் செய்ய முடியவில்லை, கேட்டால் குவாரி வந்துருச்சுங்க அதனால் நீர் வளம் குறைந்து போயிருச்சு, இப்படி எல்லாம் குற்றச்சாட்டு சொல்றாங்க. நாங்களும் பலமுறை வந்து மாவட்ட நிர்வாகத்திற்கும் மனு கொடுத்தோம், போராட்டம் செய்தோம் இது வரைக்கும் செவி சாய்க்கவில்லை. நானும் நாற்பது ஆண்டுகாலமாக தொடர்ந்து மனு கொடுத்து கொண்டு இருக்கிறேன் ஆட்சியாளர்களும் மாறிக்கொண்டு தான் இருக்கிறார்கள் இது வரைக்கும் எந்த நடடிவக்கையும் எடுக்கவில்லை. நூறு சதவித மக்களில் எண்பது சதவீதம் மக்கள் சிறுதாமூர் ஊராட்சியை காலி செய்துவிட்டார்கள். இப்போது இருப்பது இருபது சதவீதம் தான். நாங்கள் எப்படி வாழ்வது, எப்படி ஆடு, மாடுகள் வைத்து வாழ்வது, வீட்டின் சுவர்கள் விரிசல் விடுகிறது. விவசாயம் செய்ய முடியவில்லை, பள்ளி மாணவர்கள் சரியான நேரத்திற்கு பள்ளிக்கு போக முடியவில்லை. டிபி, ஆஸ்துமா போன்ற நோய்கள் ஏற்படுகிறது இதனால் மருத்துவமனைக்கு சென்றால் டாக்டர் கூறும் பதில் குவாரியில் வேலை செய்வதால் இந்தமாதிரியான நோய்கள் வரக்கூடும் என்று சொல்கிறார்கள். இதே நிலை ஏற்பட்டால் எங்கள் கிராமம் மொத்தமாக அழிந்துவிடும். இந்த கிராமத்தை வல்லுநர்கள் ஆய்வு செய்து |

| | | |
|---|---|---|
| | | எப்பொழுது நிலநடுக்கம் வரும் என்று தெரியாது நாளை நடக்கலாம் அல்லது அரை மணி நேரத்தில் நடக்கலாம் என்று சொல்கிறார்கள். இதுதொடர்பாக பலமுறை மனுக்கள் முதலமைச்சருக்கும் கொடுத்திருக்கிறோம், இந்த கிராமத்தை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும். இந்த சிறுதாமூர் ஊராட்சியே அழிந்து விடவேண்டுமா நீங்களே சொல்லுங்கள். நாங்களும் தொடர்ச்சியாக மாசு கட்டுபாட்டு வாரியத்திற்கும் மனு கொடுக்கிறோம். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒரு சின்ன பள்ளி மாணவன் லாரி மோதி இறந்துவிட்டால் அந்த நிமிடம் ஒரு ஆம்பூலன்ஸ் வர முடியவில்லை, இரவு நேரங்களில் பேருந்து இயங்கவில்லை, நாங்கள் பல முறை குவாரி வேண்டாம் என்று சொல்கிறோம் ஆனால் மறுபடி மறுபடி குவாரி வந்தால் நாங்கள் என்ன செய்வது, நாங்கள் இலங்கை அகதிகள் மாதிரி ஊரை விட்டு போக வேண்டுமா. டிபி, ஆஸ்துமா, கேன்ஸ்சர் கோரானா போன்ற நோயை விட இந்த பாதிப்பு அதிகம்.<br><br>நான் ஸ்கூல் வாகனம் ஒட்டுகிறேன் சரியான நேரத்தில போக முடியவில்லை, இது ஜனநாயகமா. எங்கள் கிராமத்தில் பனை மரங்கள் அதிகம் காணப்பட்டது இப்பொழுது ஒரு மரம் கூட இல்லை, சென்னைக்கு சென்று வேலைக்கு போக முடியவில்லை, கூலி தொழிலுக்கு போக முடியவில்லை, ஒரு ஆடு, மாடு வளர்க்க முடியவில்லை எதுவுமே செய்ய முடியவில்லை, இது வரையில் குவாரியில் தண்ணீர் தெளிப்பதில்லை, சிமெண்ட சாலை போடுகின்றேன் என்று சொன்னார்கள், இது வரைக்கும் போடவில்லை. மீண்டும் குவாரி அனுமதி அளித்துக்கொண்டே இருக்கிறார்கள். |

| | | |
|---|---|---|
| | | பக்கத்து கிராமம் போய் பார்த்தால் ரொம்ப அருமையாக உள்ளது, எங்க பூச மலையில் நாங்க சின்ன வயசுல இருக்கும் போது ஆடு, மாடு மேய்த்திருக்கிறேன், மூலிகை பொருட்கள் கிடைக்கும். அப்ப இருந்தவர்கள் எல்லாம் நூறு வருஷம் நல்ல இருந்தாங்க. அதனால் மறுபடியும் மறுபடியும் குவாரியை இப்பகுதிக்கு கொண்டுவராதீர்கள். இது இந்த மக்களின் சார்பாக சொல்லுகிறேன். குவாரி இல்லையென்றால் ஊர் மக்கள் நல்ல இருப்பாங்க அதனால எங்க கிராமத்திற்கு கல் குவாரி வேண்டாம் எங்கள் கிராமம் சார்பாக சொல்கிறேன் |
| 2 | திரு. S. சாந்தகுமார், அருங்குன்றம் | எங்கள் பகுதியில் கல் குவாரி வருவதினால் இதனால் பத்து ஊர், இருபது ஊர் பிழைக்கிறது. அதனால் எங்களுக்கு குவாரி வருவதில் ஏதுவும் பிரச்சனை இல்லை. |
| 3 | திரு. தேவேந்திரன், பட்டா | முதலில் இந்த கூட்டத்தை சம்பந்தப்பட்ட இடத்தில் வைக்கவில்லை. சம்பந்தப்பட்ட ஆட்களும் வரவில்லை, பாதிக்கப்பட்ட ஆட்களும் இங்கு வரவில்லை. இந்த கூட்டத்தை 4 கிலேமீட்டர் தூரம் தள்ளி வைத்துள்ளார்கள், அந்த கிராமத்தில் மக்களிடம் பாதிப்புகளை கேட்டு கூட்டம் நடத்த வேண்டும் ஆனால் இங்கு மாற்றி வேறு கிராமத்தில் வைத்து கருத்து கேட்பது நியாயமில்லை. இரவு நேரங்களில் லாரிகள் போவது தடுக்க வேண்டும். குவாரிகள் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அளவுகளை விட வேறு இடத்தில கற்கள் எடுக்கிறார்கள் அதாவது விதி பிரகாரம் எடுக்க வேண்டும். அடுத்தது இரவு முழுவதும் எடுத்துச்செல்கிறார்கள், இப்பொழுது கூட என் வீட்டின் பக்கத்தில் உள்ள குவாரியில் இரவு முழுவதும் கற்கள் எடுக்கிறார்கள். இப்போது போர் வெடி வைக்கிறார்கள் |

| | | |
|---|---|---|
| | | இதனால் அருகில் உள்ள வீடுகளில் விரிசல் விடுகிறது. போர் வெடி வைப்பதை நிறுத்த வேண்டும். குவாரியை வீடுகளின் பக்கத்தில் அனுமதிப்பதை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| 4 | திரு.பாண்டியன், திருமுக்கூடல் | இந்த அரசு, மற்றும் அரசு அதிகாரிகள் ஒரு குறிக்கோள் வைத்து இருக்கிறார்கள் பொது மக்களுக்கு செலவு செய்ய வேண்டிய தொகையை கல் குவாரிக்கு செலவு செய்கிறார்கள். விவசாயிகள் யாரும் எழுத படிக்க தெரியாதவர்கள், 5 அடி உயரத்திற்கு கல்குவாரி உரிமையாளர் பாதை அமைத்து செல்கிறான், இதனால் எங்களால் விவசாயம் எதுவும் செய்ய முடியவில்லை, நான் டிராக்டர் வைத்து இருக்கிறேன் இந்த பாதையில் செல்ல முடியவில்லை. எனவே எங்களுக்கென்று தனி பாதை வேண்டும். அன்றைக்கு பத்து லாரி போனது, இன்றைக்கு ஆயிரத்து ஐநூறு லாரி போகுது, அதுவும் வேகமாக போகிறது, |
| 5 | திரு.C. தேவராஜ், அருங்குன்றம் | பதினைந்து வருடத்திற்கு மேலாக எங்கள் கிராமத்தை முழுவதும் அழித்துவிட்டார்கள், இருப்பது இன்னும் கொஞ்சம் தான். இந்த தனியார் கல் குவாரி மட்டும் அல்ல அரசு குவாரியும், இங்கு நடக்கின்றது, மீதமுள்ள இடத்தை இந்த கல் குவாரிக்கு விடுவது என்பது இந்த மக்களை குழி தோண்டி புதைப்பதற்கு சமம். இந்த கல் குவாரியானது ஆயிரத்திற்கும், ஐநூருக்கும், நூற்றுக்கும், மக்களை பயன்படுத்தி விட்டு இந்த கல் குவாரியை அரசு திறக்கும் என்பது மக்களுக்கு எதிரானது. இதை அரசு கவனிக்கனும் நாங்கள் இது சம்பந்தமாக நீதி மன்றத்திற்கும் செல்ல தயாராக இருக்கிறோம், மக்களை திரட்டி போராட்டம் செய்கின்ற வேலைகளிலும் இருக்கிறோம். |

| | | |
|---|---|---|
| 6 | திரு.V. மனோகரன், அருங்குன்றம் | மாவட்ட நிர்வாகத்தை பொறுத்தவரையில் பொது மக்களை நேரிடையாக கல் குவாரி உரிமையாளரோடு மோத விடுகிறார்கள். கடந்த கருத்து கேட்பு கூட்டத்திலும் இதே போலத்தான் கேட்கப்பட்டது மக்களுடைய குறைபாடுகளை ஊராட்சி மன்ற தலைவர்களும் ஊராட்சி மன்ற உறுப்பினர்களும் தங்கள் கருத்துகளை பதிவு செய்தனர், என்ன கருத்தை பதிவு செய்தனர். நீர்வரத்து கால்வாய் அனைத்தும் அகற்றப்படுகிறது. ஆகவே இத்தொழிலை செய்யக்கூடிய குவாரி உரிமையாளர்களை நீர் வரத்து கால்வாய்யை சரி செய்ய வேண்டி பரிந்துரை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வைத்தோம் செய்திர்களா? இல்லை, இராண்டாவது கோரிக்கையாக சாலைகள் மிக பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. பள்ளி மாணவர்கள் அனைவரும் வீட்டுக்கு வருவது சிரமமாக உள்ளது. பள்ளி செல்வதற்கு கஷ்டமாக இருக்கிறது. அரசு பேருந்து வருவது இல்லை. இதை செய்யாதீர்கள் நாங்கள் யாரும் குவாரிக்கு எதிராக செயல்படுவதில்லை. மக்களுடைய வாழ்வதாரம் சரியாக இருந்தால் நாங்கள் அனுமதிப்போம் என்று சொன்னோம். இந்த சாலை முப்பது அல்லது நாற்பது டன் வெயிட்டை தான் தாங்கும் அதில் நூறு அல்லது அதற்கு மேல் வெயிட் போனால் தாங்குமா, இது போல் நடப்பதனால்தான் மக்கள் இதனை எதிர்க்கிறார்கள் இது மாறவேண்டும். |
| 7 | திரு.தாமோதரன், அருங்குன்றம் | மக்கள் சுகாதாரமாக இல்லை. ஒரு நாளைக்கு ஐந்தாயிரம் வண்டிகள் போகின்றன. இந்தப் பக்கம் லாரி, அந்த பக்கம் லாரி நடுவில் போகமுடியாது, குழந்தைகள் பள்ளிக்கு போக முடியவில்லை, அன்று அழகாக பள்ளிக்கு |

| | | |
|---|---|---|
| | | நடந்து சென்றுள்ளனர், இப்போது தினசரி பெற்றோர்கள் அவர்களை பள்ளிக்கு அழைத்துக்கொண்டு செல்கிறார்கள். மக்களை நன்றாக வழ விடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். |
| 8 | திரு.லோகேஷ், அருங்குன்றம் | இந்த கூட்டத்தை பொது இடத்தில், ஊராட்சி சம்மந்தப்பட்ட இடத்தில் நடத்துங்கள் என்று நிறைய தடவை சொல்லப்பட்டது. பொது மக்களுக்கு தெரிவியுங்கள், இங்கு வந்திருக்கும் பொது மக்கள் பாதி எங்கள் ஊர் கிடையாது. இரவில் கூட கனரக வாகனங்கள் செல்கின்றன அந்த கல்குவாரி வரப்போகின்ற இடத்தில் இருந்து முன்னூரு மீட்டர் தூரத்தில் வீடு உள்ளது. கால்வாய்கள் பராமரிக்கப்படுவது இல்லை இதை யாரும் கேட்கவில்லை. ரோடு போடவில்லை, தண்ணீர் அடிக்கவிலை மொத்த வண்டியும் அரசாங்கத்தின் பொது நிலத்தில் செல்கிறது. இதை தட்டிகேட்டால் நீ யார் என்று என்னிடம் கேட்கிறார்கள், நான் வரும் போது எல்லாம் கூட்டத்தில் பேசி கொண்டுதான் போகிறேன் ஆனால் எதும் நடந்தபாடு இல்லை. வருடத்திற்கு வருடம் ஐந்து முதல் ஏழு, எட்டு குவாரி வந்து கொண்டுதான் இருக்கிறது. மற்றொரு ஒருவர் குறிப்பிட்டார் குவாரியில் ஓட்டுநர் வேலை செய்கிறார் என்று, ஏன் என்றால் யாரும் படிக்கவில்லை அதனால் அங்கு போனால் வேலை கிடைக்கும், அங்கு பட்டதாரிக்கு ஒன்றும் வேலை கொடுக்கவில்லை. இதனால் யாருக்கும் லாபம் இல்லை, வெடி வெடிக்கும் போது பூமி அதிர்கிறது. முன்பெல்லாம் மலை ஏறி பார்க்கும் போது செங்கள்பட்டு, வாலாஜாபாத் எல்லா ஊரும் தெரியும் ஆனால் இப்பொழுது பார்த்தால் பள்ளம் மட்டும் தான் தெரிகிறது. அந்த பள்ளத்தில் |

| | | |
|---|---|---|
| | | எங்களது ஓட்டுநர் உரிமம் மற்றும் ஆதார்கார்ட், ஆகியவற்றுடன் எங்களையும் சேர்த்து பள்ளத்தில் புதைத்து விடுங்கள். சிட்டியில் எரி, குளம் ஆகியவற்றை மூடி வீடுகள் கட்டுகிறார்கள் ஆனால் இங்கு நன்றாக இருக்கும் இடத்தில் குவாரி வருகிறது, விவசாயி வறுமைக்கு நிலத்தை விற்கிறான் அதில் குவாரி நடத்துகிறார்கள். |
| 9 | திரு. சரவணன், பட்டா | ஏற்கனவே இரண்டு கூட்டத்தில் சொல்லிருந்தேன் எங்கள் ஊரில் திருடு போகிறது என்றும் இரவில் தீய செயல்கள் நடைபெறுகிறது. காவல் துறை ஓரளவு நல்லது செய்றாங்க ஆனால் எங்களுக்கு கண்டிப்பாக சிசிடிவி எற்பாடு செய்ய வேண்டும் என்று போன கூட்டத்தில் சொன்னேன். காலியான இடத்தில் புறம்போக்கு நிலத்தில் மர கன்று நட நடவடிக்கை எடுக்க வேண்டும், சாலை சேதத்தை சீர் செய்யவேண்டும், குவாரி வருவதற்கு முன் பஞ்சாயத்து தீர்மானம் பெற்று குவாரிக்கு அனுமதி கொடுக்க வேண்டும். குவாரி எப்படி வருகிறது என்று எங்களுக்கு தெரியவில்லை இதை பற்றி மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலத்திற்கு வந்து மனு கொடுத்தோம். முடிந்த குவாரிகளுக்கு பென்சிங் போட வேண்டும் என்று சொன்னோம் கண்டிப்பா போடவேண்டும் மாடுகள் தவறி விழுகிறது, நீர் வரவு கால்வாயில் ஏரி தண்ணீர் போவது கஷ்டமாக உள்ளது இதனை சரி செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். |
| 10 | திரு. கவியரசு, பட்டா | இருபத்தைந்து வருடங்களாக குவாரி உள்ளது மறுபடியும் எதற்கு குவாரி? மாணவர்கள் அவர்களால் பள்ளி செல்ல முடியவில்லை, எங்களை சுற்றி முழுவதுமாக குவாரி உள்ளது. மறுபடியும் நீங்கள் பத்து வருஷத்திற்கு குவாரி |

| | | |
|---|---|---|
| | | கொடுத்தீர்கள் என்றால் நாங்கள் எப்படி வாழ்வது. கூட்டத்தை வெளி இடத்தில் நடத்தாமல் பக்கத்தில் உள்ள இடத்தில் நடத்த வேண்டும். |
| 11 | **திரு. மனோகரன், பட்டா** | முதலில் சாலைகள் சரியாக இல்லை. என் பையன் கல்லூரிக்கு பைக்கில் போகிறான். லாரி வேகமாக வந்து சேறு அடித்ததால் கல்லூரிக்கு போகாமல் பாதியிலேயே வீட்டுக்கு வந்துவிட்டான். முதலில் மக்களுக்கு போதுமான சாலை வசதி வேண்டும், ஆனால் சாலை வசதி இல்லை. அரும்புலியூர் கூட்ரோடு பக்கத்தில் குழந்தைகள் நடந்தே போக முடியாது, வேகத்தடை ஏதும் இல்லை. எல்லா பெற்றோர்களும் பள்ளிக்கு குழந்தைகள் கூடவே செல்கிறார்கள், திருப்பி அவர்கள் அழைத்து வருகிறார்கள் யாரையும் தனியாக அனுப்ப முடியவில்லை. குழந்தைகள் பள்ளிக்கு செல்லும் ஒரு மணி நேரம் காலை எட்டு மணியிலிருந்து ஒன்பது வரை லாரிகள் செல்ல அனுமதிக்கக்கூடாது. எங்களுக்கு தேவையானது பொதுவான சாலை வசதி, எங்களுக்கு வாழ்வாதாரம் வேண்டும். எங்களுக்கு முழுக்க முழுக்க சாலை வசதி வேண்டும். குவாரி வருவதினால் ஒருவர் கூட விவசாயம் செய்வது இல்லை, எல்லோரும் கல் குவாரியில் ஓட்டுநர் வேலை செய்கிறார்கள், கொத்தனார் வேலை செய்கிறார்கள், யாரும் விவசாயம் செய்வது இல்லை. கால்வாய் வசதியும் இல்லை, இதை எல்லாம் சரி செய்யுங்கள், குவாரி வரட்டும் அது அவங்க முடிவு. ஒரு கிராமத்தில் கூட்டம் நடைபெறுகிறது என்றால் யாரிடமும் சொல்வதும் கிடையாது, அதே போல் கிராம சபை வைக்கப்பட்டது அதுவும் எங்களுக்கு தெரியாது. இன்றைக்கு மது அருந்தாதவர்கள் யாரும் இல்லை, பெரிய |

| | | |
|---|---|---|
| | | மனிதர்கள் யாரும் குடிக்கவில்லை, சின்ன பசங்க 18 வயது பசங்க குடிக்கறாங்க படிப்பது இல்லை. குழந்தைகள் படிக்கணும், கல்வி வசதி வேண்டும். நேற்று ஐந்து பசங்க பள்ளிக்கு செல்லும் வேலையில் மாணவர்கள் மீது லாரி சேறு அடித்துவிட்டது, சாலைகள் குண்டு குழியுமாக உள்ளது, எங்களுக்கு முக்கியம் பசங்க படிக்கணும். |
| 12 | திரு. சீனிவாசன், அருங்குன்றம் | பதினைந்து வருஷமா இருபது வருஷமா குவாரி இருக்குது எல்லோருக்கும் தெரியும், குவாரி நடந்து கொண்டிருக்கிறது இதற்கு நடவடிக்கை எடுக்க முடியவில்லை, இதில் நம்மை சுற்றி ஐந்து கிராமங்கள் யார் பயன் அடைந்திருக்கிறர்கள், என்று சொல்லுங்கள் பார்ப்போம். காலை 8 மணி முதல் 10 மணி வரை பள்ளி மாவணர்கள் செல்வதால் லாரி போகசுடாது என்று சொன்னோம் ஆனால் லாரி போய்கொண்டு தான் இருக்கிறது. இங்கு ரோடு வசதி இல்லை, தண்ணிர் விடுகிறார்கள் என்று சொன்னார்கள் அதுவும் கிடையாது, குவாரியால் இன்று நிறைய குடும்பங்கள் பிழைக்கின்றன. குவாரி நடைபெறுகின்றன என்றால் அதற்கு பென்சிங் போடுங்க, லாரி செல்வதை எட்டு மணியிலிருந்து பத்து மணி வரை நிறுத்துங்கள், மாலையில் 4 மணியில் இருந்து நிறுத்துங்கள், இங்கு ரோடு சரியில்லையென்றால் ஞாயிறு குவாரி விடுமுறை அன்று சரிசெய்யுங்கள், நீங்கள் குவாரியில் வேலை செய்யமால் ஐநூறு கொடுத்தால் போதும், ஆயிரம் கொடுத்தால் போதும் என்று நினைக்கிறார்கள், வட மாநிலத்திலிருந்து ஒவ்வொரு குவாரிக்கும் நூற்று ஐம்பது பேர் வேலை செய்கிறார்கள், நீங்கள் சொன்னீர்கள் உங்களுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக வேலை தருவோம் என்று சொன்னீர்கள், ஆனால் |

| | | |
|---|---|---|
| | | எங்கள் ஊரில் படித்து விட்டு பத்து பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள், அவர்களுக்கு தகுதிக்கேற்றார் போல், டிரைவர், ஆப்ரேட்டர் வேலை கொடுங்கள். எங்கள் ஊரில் உள்ள பத்து மாணவர்களை படிக்கவையுங்கள். உங்கள் ஊர் தலைவர் அவர்களிடம் சென்று வேலை வாங்கி தர வேண்டும் என்று கேளுங்கள். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கிடைத்தால் மாதம் பதினெந்து ஆயிரம் கிடைத்தால் அவர்களது குழந்தை வாழும், அவர்களது குடும்பம் வாழும். குவாரியை நம்மால் நிறுத்த முடியாது, எங்களுக்கு தகுதி ஏற்றார் போல் வேலை கொடுங்கள். |

இதையடுத்து பொதுமக்கள் எவரும் கருத்துக்கள் கூற முன்வராத பட்சத்தில் இப்பொதுமக்களின் கருத்து கேட்பு கூட்டத்தை முடிவுக்கு கொண்டுவரும் விதமாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்தி தந்த மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், ஏனைய அரசுதுறை அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் சமுக ஆர்வலர்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டு இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் பதிவு செய்த கருத்துக்கள் முழுமையாக ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்பட்டு மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகத்திற்கு அனுப்பப்படும் என்று கூறி கருத்துக் கேட்பு கூட்டத்தை நிறைவு செய்தார்.

இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களின் பட்டியல் மற்றும் கோரிக்கையாக பெறப்பட்ட புகார் மனுக்கள் இத்துடன் இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

தகுதி வாய்ந்த அலுவலர்/ மாவட்ட வருவாய் அலுவலர்,(நி.எ), தேசிய நெடுஞ்சாலை,
காஞ்சிபுரம் மாவட்டம்.